வள்ளுவமும் வைணவமும்

(கி. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸன், இந்தியன் வங்கி, பெங்களூர்)

திருக்குறளை உலகப் பொதுமறை என்றும். திருவள்ளுவரை செந்நாப் புலவர் என்றும் இயம்புவர்கள். அது அந்நூலின் பெருமையையும் நூலாசிரியரின் பெருமையும் பற்றியே. ஶ்ருதி, ஸ்ம்ருதி பிரகாசிதமான ஸ்ரீ வைணவம் என்பது சமயம் மட்டுமன்று. அது ஒரு வாழ்க்கை நெறி. ஆழ்வார்கள் கண்ட வைணவமோ சரணாகதி மார்க்கம் என்றே பார்க்கப்படுகிறது. ஸாரமாக சொல்லப்போனால் நமது ஸித்தாந்தத்திள் சீரிய கருத்துக்கள் இரண்டு. அவை,

1. சரீராத்ம பாவம்:- சர்வேஸ்வரள் சகல சேதனாசேதனங்களையும் சரீரமாகக் கொண்டவன் என்பதே அடிப்படை உண்மை. பிரக்ருதி ஆத்ம பேத விவேகம் மற்றும் சர்வ நியந்தா ஈஶ்வரன் என்பது முக்கியமாக அறியவேண்டுவது.

2. ப்ரம்மஸகுணம்:- சுபகுணங்களே குடிகொண்ட சர்வேஸ்வரனிடத்தில் ஹேய குணங்கள் ஒன்றும் இல்லை என்பதே நிர்க்குணம் என்பதன் பொருளாம், விபவாவதாரம் ஈச்வரனது திருக்குணங்களை காட்டி ஸத்துக்களை ரக்ஷிப்பதற்கே. விரோதி நிரஸனம் பிரயோஜநாந்தரம் என்பதே பரமார்த்தம், இவைகளையே பிரம்ம ஸூத்ராதி. பகவத் கீதாவசனங்கள் விரிவு படுத்திப் பேசுகின்றன.

திருவின் கேள்வனாய் எல்லையற்று அளவின்றி இருப்பவனாய், உயர்நத குணங்களின் திரள்களுக்கே ஓரிடமான உருவனாய், தோஷங்கள் எதுவும் அணுகாதவனாய், அவற்றை அழிக்கின்றவனாய், பரமாகாசம் எனப்படும் ஸ்ரீ வைகுந்தத்தை வாஸஸ்தலமாய் உடயவனாய். வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதவனாய் அன்புடன் வணங்கின ஜனங்களின் கண்களுக்கு இலக்காமவனுமான ஆதி புருஷனுடைய திருவடித் தாமரைகளில் கைங்கர்யம் செய்வதே பரம புருஷார்த்தம் என்பது நம் ஸம்ப்ரதாயம்,

நிர்குண நிராகார பிரம்மத்தை இதர சம்ப்ரதாயத்தினர்கள் போற்றிப் பேசினாலும் ஆழ்வார்களுக்கு முன்னோடியான திருவள்ளுவர் ஸகுண ஸாகார பிரம்மத்தையே போதிக்கிறார் என்பது கீழ்வருமவற்றால் விளங்கும். திருக்குறளின் தொடக்கத்திலேயே ஆதிபகவன் என்றதால் காரணத்வமும், இருவினையும் சேரா இறைவன் என்றதால் தோஷங்கள் ஏதும் தட்டாதவன் ஸர்வேச்வரன் என்று பேசப்பட்டது.

ஸ்ரீ ஸஹஸ்ரநாம அத்யயத்திலும் சரி, ஸ்ரீ லக்ஷ்மி அஷ்டோத்ர நாமாவளி முதலான ஸ்லோகங்களிலும் சரி, தேவதாந்ரங்களைக் குறிப்பிடும்போது, அவரவர் பெயர்களையிட்டே அதாவது ஈஸ்வர உவாச, பார்வத்யுவாச; ப்ரம்மோ உவாச, தேவ்யோ வாச என்றே முதலிக்க, கீதாவசநம் சொல்லுகையில் ஸ்ரீகிருஷ்ணோவாச என்றல்லாமல் ஸ்ரீபகவாநுவாச என்றும் ஸ்ரீமத்பகவத் கிதையில், வியாசரும் 'பகவான்' என்ற சப்தத்தாலே ஸ்ரீகிருஷ்ண ருபேண ஸ்ரீமன் நாராயணனையே குறிப்பிடுகிறார் என்பதும் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிற ஒன்றன்றோ? பகவான் என்பது கல்யாண குண ப்ரகாசகமான சொல் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதே போல் 'ஆதி' என்ற சொல்லை 'அகரமுதல' என்பதற்கும், 'பகவன்' என்பதற்குமாக சேர்த்து பொருள் கொள்ள வேண்டும். ஸ்ரீகஜேந்திர ஆழ்வான் விருத்தாந் தத்தில் இருந்து 'ஆதி' என்ற சொல்லால் உணர்த்தப்படுமவனும் ஸ்ரீமன் நாராயணனே என்பது லோக ப்ரஸித்தம். ஆக வள்ளுவர் 'ஆதி' 'பகவன்' என்று குறிப்பிட்டதி ஸ்ரீமத் நாராயண னையே உட்கருத்தாக கொண்டுள்ளார் என்றால் மிகை ஆகாது. தவிர, 'இறை' என்ற பதத்தாலே. ஸ்வாமித்துவத்தையும் 'மலர் மிசை ஏகினான்' என்றத்தாலே: இதயத் தாமரையில் நியந்தாவாக இருக்கும் அந்தர்யாமித்துவத்தையும். 'தாமரைக் கண்ணான் உலகு' என்றவிடத்து. பரத்வ ப்ரகாசமான புண்டரீகாக்ஷத்துவத்தையும் பேசுகிறார். தாமறை போன்ர் கண்களை உடையவன் என்றல் லாமல் (கொப்பூழ்த்) தாமரை மேல்(கண்) உத்பவித்தவனான பிரயன் உலகு என்று கொண்டாலும், ஸ்ருஷ்டி காரணத்லத்தை பேசியதாகக் கொள்ளலாம்.

*'நான்முகனை நாரயணன் படைத்தான். நான்முகனும் தான் முகமாய் சங்கரனைத் தான்படைத்தான்'. என்ற திருமழிசை ஆழ் வரின் ஸ்ரீஸூக்தி இங்கே தெள்ளத் தெளிவாகிறது. இன்னும், ''தனக்குவமை இல்லாதான் - ஸர்வேஸ்வரத்வம், ''வேண்டுதல் வேண்டாமை இலான்'' - நிஷ்காம்யத்வம்-''அறவாழி அந்தணன்'' வேதவேத்யன் என்றெல்லாம பேசியது கொண்டு, வள்ளுவரின் கடவுள் வாழ்த்து பாட்டுடைத் தலைவன் 'திருமாலே' என்னில் அது உண்மையின் பிரதிபலிப்பே, வைணவம் எனபடுவதும் ஈதே ஆகும். 'மலர்மிசை ஏகினன் மாணடி', 'வேண்டுதல் வேண்டாமை இலானடி', 'இறைவன் அடி', 'தனக்குவமை இல்லாதான் தாள்', 'அறவாழி அந்தணன் தாள்', 'எண்குணத்தான் தாள்'. என்றிவை யால் குணமும் ஆகாரமும் பிரதிபாதித்தது ஸ்பஷ்டமாக விளங்குகிறதனறோ? திருவடிகள் திருமேனிக்கு உபலக்ஷணம்.

திருவடிகளைச் சொன்னது திருமேனியைச் சொன்னதாகவே ஆகும். ப்ராப்ய, ப்ராபக விஷயமாக ஆழ்வார்கள் சம்ப்ரதாயம் லோக ப்ரஸித்தம். உபயாந்தரங்கள் ஸ்வரூப விரோதம் என்பதும், பிரபத்திக்கு யாவரும் அதிகாரிகள் என்பதும்

*அறத்திலூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு (4, 1)

*மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன் (4, 4)

*மற்றது (அறம்) பொன்றுங்கால் பொன்றாத்துணை (4, 6)
என்று பலவாறு அறன் வலியுறுத்திய திருவள்ளுவர்,

*மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்-பழித்தது ஒழித்து விடின் (28, 10).

என்று க்ருத்யமான உபாயாந்தரங்களை விடுத்து. 'தாளையும்', 'அடி' யையும் ப்ராப்ய மாக பேசியதால் 'சரணாகதி' மார்க்கமே திருவள்ளுவரின் ஸித்தாந்தம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகவும் குன்றின் மேல இட்ட விளக்காகவும் விளங்குகிறதன்றோ?

*அவர் பொருள் தம்தம் வினையான் வரும் (7, 3)

*பார்ப்பனன் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும் (14, 4)

*குலனுடையான் கண்ணே உள (23, 3)

எனற பல குறள்களால் கர்ம, குல ஜனிதமான உபாதிகளைத் தள்ளி, அர்த்தகாமாதிகளை நெறிப்படுத்தியதும் திருவள்ளுவரே என்னலாம். செல்வமும், வாழ்நாளும் நிலை இல்லாதது என்பதையே

*செல்வம் போகும் அது விளிந்தற்று (34, 2) என்றும்

*குடம்மை தனித்து ஒழிய புள் பறந்தற்றே உடம்போடு உயிரிடை நட்பு (34, 8) - என்றும் பேசுகிறார்.

அவரே - *செல்வம் அது பெற்றால் அற்குப ஆங்கே செயல் (34, 3) என்றும்

*நாச் செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை மேற்சென்று செய்யப்படும் (34, 5) - என்றும் பேசுவது காணலாம். செல்வம் நிலைக்காத இயல்புடையது என்றாலும், அத்தகைய செல்வத்தைப் பெற்று அப்போது நிலையான அறங்களை செய்ய வேண்டும். நாவை அடக்கி, விக்கல் மேலெழுவதற்கு முன்னே (இறப்பு நெருங்குவதற்கு முன்) நல்ல அறச்செயல் விரைந்து செய்யத்தக்கதாகும் என்பதே. இதன் தாத்பர்யம்,

(26ம் பக்க தொடர்ச்சி)

*ஸர்வதர்மாந் பரித்யஜ்ய என்ற கீதாவசனத்துக்கு ஈடாக இங்கு வள்ளுவர் பேசும் அறமாவது :

*பற்றுக பற்றற்றான் பற்றினை - அப்பற்றைப் பற்றுக, பற்று விடற்கு (35, 10) என்பதே ஆகும். இத்தால் பிராப்ய, பிராபகம் இரண்டும் ஈஸ்வரனே என்பதும்.

*வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் (35, 6)

என்றத்தால் பிரம்ம பதவிக்கும் மேலான பரமாகாசத்தில் 'அடிமை செய்து அங்கே ஆயன் உடனிருப்ப' என்றபடி கைங்கர்ய பிராப்தியையே காட்டினார் என்று கொள்ளத் தடையேதும் இல்லை. வாழ்க வள்ளுவர் நாமம்.